इंडिया रिसर्व् वங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www.rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in
संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

அக்டோபர் 05, 2016

**இந்திய ரிசர்வ் வங்கி, மெர்கன்டைல் அர்பன் கோ-ஆபரேடிவ் வங்கி லிமிடெட், மீரட், உத்தரப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட உத்தவுகளை நீட்டிக்கிறது**

இந்திய ரிசர்வ் வங்கி, மெர்கன்டைல் அர்பன் கோ-ஆபரேடிவ் வங்கி லிமிடெட், மீரட், உத்தரப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட உத்தவுகளை, மேலும் 6 மாதங்களுக்கு அக்டோபர் 06, 2016 முதல் ஏப்ரல் 05, 2017 வரை (மறு ஆய்வுக்குட்பட்டு) நீட்டிக்கிறது. வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 (கூட்டுறவு சங்கங்களுக்கும் பொருந்தும்) சட்டப்பிரிவு எண் 35 (A) (1)-ன்கீழ் இந்த வங்கிக்கு வழங்கப்பட்ட செப்டம்பர் 30, 2015 தேதியிட்ட உத்தரவின் மூலம் அக்டோபர் 06, 2015 முதல் கட்டுப்பாட்டு உத்தரவுகளின் கீழ் இவ்வங்கி உள்ளது.

மார்ச் 29, 2016 தேதியிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் ஆணைப்படி, மேற்குறிப்பிட்ட இந்தக் கட்டுப்பாட்டு உத்தரவு திருத்தப்பட்டது / அதன் செயல்பாட்டுக் காலம் நீட்டிக்கப்பட்டது. கடைசியாக இந்த உத்தரவின் காலம் அக்டோபர் 05, 2016 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. இது தற்போது, அக்டோபர் 06, 2016 முதல் ஏப்ரல் 05, 2017 வரை 6 மாதங்களுக்கு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது செப்டம்பர் 30, 2016 தேதியிட்ட திருத்தப்பட்ட உத்தரவின் மூலம் மறுஆய்வுக்குட்பட்டு வெளியிடப்படுகிறது. பொதுமக்கள் பார்வையிடும் வகையில் இந்த உத்தரவின் நகல் வங்கிக் கட்டிடத்தில் அறிவிப்புப் பலகையில் வைக்கப்படுகிறது.

இவ்வாறு உத்தரவுகளில் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் வெளியிடப்படுவதன் காரணமாக, இந்த வங்கியின் நிதிநிலை மேம்பட்டதாகவோ அல்லது நலிவுற்றதாகவோ கருதக்கூடாது. சூழ்நிலைக்கேற்ப ரிசர்வ் வங்கி இந்த உத்தரவுகளில் மாற்றங்கள் செய்யக்கருதிடும்.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிக்கை வெளியீடு: 2016-17/863**